*2024 பிப்ரவரி 21*]

*வினா வரிசை எண் 31, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

**31—**

## வாய்க்காலைத் தூர்வாருதல்

***21452—முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்:** *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பொள்ளாச்சி-வடசித்தூர் கிளை வாய்க்காலைத் தூர்வார அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) வடசித்தூர் கிளை வாய்க்கால் தூர்வாரப்படுமா என்று கேள்வி கேட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே, தூர்வாரி இருக்கிறோம்; தூர்வாரிக் கொண்டிருக்கிறோம். அதில் இரண்டு பகுதிகள் உள்ளன. மொத்தம் சுமார் 10,150 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. அதில் சுமார் பாதியளவிற்கு 2022–2023 ஆம் ஆண்டில் 17 இலட்சம் ரூபாயில் தூர்வாரப்பட்டது. தற்போது, இந்த நிதியாண்டில் அடுத்த பகுதியைத் தூர்வாருவதற்கான நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம். PAP–ன் மொத்தக் கால்வாயையும் தூர்வார வேண்டுமென்பதற்காகத் தற்போது DPR தயார் செய்திருக்கிறோம். 17 கோடி ரூபாய் மதிப்பிடப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் அனுமதி கிடைத்த பிறகு, PAP–ன் முக்கியக் கால்வாய்கள் அனைத்தும் தூர்வாரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்கள்.*

**முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள், இந்தத் துறையின் நீண்ட அனுபவமும் ஆற்றலும் பெற்றவர். அவரிடத்திலே நான் கேட்டுக்கொள்வது,*

வடசித்தூர் கிளை வாய்க்கால் என்பது 10,150 ஏக்கர் பாசனத்திற்குண்டான கிளை வாய்க்கால் ஆகும். அது இரண்டு பிரிவாக இருக்கிறது. முதலாவது மண்டலம், நான்காவது மண்டலம் என 2 zones ஆகப் பிரித்து நீர் பாய்ச்சப்படுகிறது. ஒவ்வொரு மண்டலத்தின் மூலமும் 5,080 ஏக்கர் நிலம் பாசனம் பெறுகிறது. கடந்த zone பாசனம் இப்போதுதான் முடிவடைந்தது. ஆனால், tail end என சொல்லக்கூடிய கடைமடைக்குத் தண்ணீர் சென்று சேரவில்லை. அதற்குக் காரணம் வாய்க்கால்கள் முழுவதும் தூர்ந்துபோய் பழுதடைந்திருப்பதால், தண்ணீர் ஆங்காங்கேயுள்ள பள்ளம், படுகைகளில் ஓடி வீணாகிறதே தவிர, கடைமடையைச் சென்றடைவதில்லை. எனவே, தயவுசெய்து வரும் ஆகஸ்ட் மாதத்தில் தண்ணீர் திறக்கும்போது, வடசித்தூர் கிளை வாய்க்காலை முழுமையாகத் தூர்வாரி, வேறு என்னென்ன பணிகள் செய்ய வேண்டுமோ அவற்றையெல்லாம் செய்து, கடைமடை வரை தண்ணீர் சென்றடையத்தக்க வகையில் மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் பணிகளைச் செய்து கொடுப்பார்களா என்பதனை தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிகாரிகள் கொடுத்த புள்ளிவிவரத்தை நான் இங்கே சொல்கிறேன். ஆனால், அவர் அந்த இடத்திலே வசிக்கிற அனுபவத்தின் அடிப்படையில் அதைச் சொல்கிறார். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிச்சயம் நிறைவேற்றப்படும், கவனிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்கள். நன்றி சொல்லுங்கள்.

**முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக்க நன்றி ஐயா. பரம்பிக்குளம்–ஆழியாறு திட்டம் ஆரம்பிக்கப்பட்டு, செயல்பாட்டிற்கு வந்து, ஏறத்தாழ 60 ஆண்டுகள் ஆகிவிட்டன. 1965 ஆம் ஆண்டு முதல் நீர்ப்பாசனம் நடைபெற்று வருகிறது. அதனுடைய மேல்மடையிலிருந்து கடைமடை வரையிருக்கிற அனைத்து வாய்க்கால்களும்,

*2024 பிப்ரவரி 21]*

*பரம்பிக்குளம் மெயின் வாய்க்கால், திருமூர்த்தி அணையிலிருந்து வெள்ளக்கோவில் கடைசி வரையில் 123 கி.மீ. நீளமுள்ள மெயின் வாய்க்கால் முழுவதுமாகத் தூர்வாரப்பட்டு, செப்பனிடப்பட்டு அதனுடைய கொள்ளளவு அதிகப்படுத்தப்பட வேண்டும். தற்போது 1,100 கன அடி தண்ணீர் போகிற அளவிற்கு இருக்கிற கொள்ளளவை, மேலும் அதிகமாக்கும் வகையில், அனைத்து கிளை வாய்க்கால்களையும் (*distributary channels*) முழுமையாகக் கம்பி கட்டி, கான்கிரீட் போட்டு, மொத்தம் 4 இலட்சத்து 25 ஆயிரம் ஏக்கர் நிலங்களுக்கும் தடையின்றி தண்ணீர் சென்றடையும் வகையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எனக்கு பதிலளித்ததுபோல், முழுமையாக அணையினுடைய மேல் பகுதியிலிருந்து கடைமடை வெள்ளக்கோவில் வரை இருக்கிற அனைத்துப் பகுதிகளிலும், பிரதான வாய்க்கால் முதல் கிளை வாய்க்கால்கள் வரை, அனைத்திற்கும் முழுமையாகக் கம்பி கட்டி, கான்கிரீட் போட்டு, தண்ணீர் வீணாகாமல் விவசாயிகளுக்கு* dam to root, *அணையிலிருந்து பயிரின் வேர் வரை தண்ணீர் செல்லத்தக்க வகையில், தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தத்தக்க வகையில், ஒரு நல்ல திட்டத்தை, அனுபவம் வாய்ந்த நம்முடைய மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் செய்து கொடுப்பார்களா என்பதை தெளிவான, விளக்கமான பதிலின் வாயிலாக நான் அறிய விரும்புகிறேன்.*

*முற்பகல் 10–20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தெளிவாக, விளக்கமாகவே சொல்கிறேன். எனக்கே அதனுடைய முழு விவரம் தெரியும். எந்தெந்த வாய்க்கால்கள் அடைபட்டிருக்கின்றன; எந்தெந்த வாய்க்கால்களினுடைய* tail end*-க்குத் தண்ணீர் செல்லவில்லை என்பதும் எனக்குத் தெரியும். ஆகையினால்தான், நான் ஆரம்பத்திலே சொன்னேன்,* PAP*-யினுடைய மொத்த வாய்க்கால்களை, கிளை வாய்க்கால்கள் உட்பட,* PAP*-யினுடைய* main canal*-லிருந்து எல்லாவற்றையும் தூர்வார வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, 55 வருடங்கள் ஆகிவிட்டன. காட்டூர்* canal*-கள்கூட உடைந்து போயிருந்தன. அதையும் சீர் செய்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும்*

சொல்லப்போனால், காட்டூர் canal–க்குள்ளே jeep–லே ஒரு பகுதியிலிருந்து மறுபகுதி வரையிலே நானே பயணம் செய்து பார்த்துவிட்டு, அந்தக் கால்வாயைச் சீர்படுத்தி இருக்கிறேன். எனவே, அதிலே மாண்புமிகு உறுப்பினருக்கு எவ்வளவு அக்கறை உண்டோ, அதே அக்கறை அரசுக்கும் உண்டு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்வாய்கள் தூர்வாருகின்ற பணிகளிலே—குறிப்பாக எங்களுடைய நந்தன் கால்வாய் திட்டம் என்பது கோணலூர் மற்றும் பனமலைப்பேட்டை வழியாக விழுப்புரம் மாவட்டம் வரை பாசனம் வழங்குகிற ஒரு திட்டம் ஆகும். அந்தத் திட்டத்தில் இன்னும் பணிகள் முடிக்கப்படாமல் இருக்கின்றன. ஆகவே, அந்தப் பணிகளை விரைந்து முடிப்பார்களா? அதேபோல, lift irrigation மூலம், அந்தக் கால்வாயிலிருந்து கீழ்பெண்ணாத்தூர், கருங்காலிக்குப்பம் பெரிய ஏரி போன்ற ஏரிகளுக்கு தண்ணீரை நிரப்புவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா? இப்போது, என்னுடைய ஒன்றியத்திலே உள்ள ஒரு பகுதியிலே எல்லா ஏரிகளும் நிரம்பி இருக்கின்றன. இன்னொரு பகுதியில் ஏரிகளிலே தண்ணீரே இல்லாமல் இருக்கிறது. ஆகவே, lift irrigation மூலம் அந்தப் பகுதிகளுக்கெல்லாம் தண்ணீரைக் கொடுத்தால், அந்த ஏரிகளெல்லாம் நிரம்பி, அங்குள்ள விவசாயிகளுக்குப் பயனளிக்கக்கூடிய வகையிலே இருக்கும். ஆகவே, கர்நாடகாவில் உள்ளதைப்போல, lift irrigation முறையில், நீரை அனைத்து ஏரிகளுக்கும் அனுப்புவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, lift irrigation என்பது வரவேற்கத்தக்கதுதான். ஆனால், அதற்கு நிதியாதாரங்கள் அதிகம் வேண்டும். ஆகையினால், எங்கு தேவையோ, எங்கே chronic ஆன ஓர் இடம் இருக்கிறதோ, அதற்கு, அரசு முதலில் முன்னுரிமை கொடுத்து செய்யும்.

*2024 பிப்ரவரி 21]*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

**திரு. சு. ரவி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அரக்கோணம் தொகுதிக்குட்பட்ட அரிகிலபாடி, தக்கோலம், ஆட்டுப்பாக்கம், பள்ளூர் ஆகிய பகுதிகளில் கசக்கால்வாய்கள் நீண்ட நாட்களாகத் தூர்ந்துபோய் உள்ளன. அவை தூர்ந்துபோய் உள்ளதால், ஊற்று வராமல் தண்ணீர் இல்லாத நிலையுள்ளது. பக்கத்திலுள்ள கிணறுகளிலெல்லாம் தண்ணீர் குறைந்திருக்கிறது. குடிநீர் ஆதாரமெல்லாம் மொத்தம் 17 கிலோ மீட்டர் தூரம் வரை பாதிக்கப்பட்டிருக்கிறது. அந்த 17 கிலோ மீட்டர் தூரமும் தூர்ந்து போயிருக்கிறது; ஆக்கிரமிப்புகளும் இருக்கின்றன. எனவே, உடனடியாக அந்தக் கசக்கால்வாய்களையெல்லாம் தூர்வாரித்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது மிகவும் வருத்தமாக இருந்தது. கால்வாய் பூராவும் தூர்ந்து போயிருக்கிறது என்று சொன்னார். இது ஒரே நாளிலே தூர்ந்து போகாது. பல வருடங்களாகத் தூர்ந்து போயிருக்க வேண்டும். புரிகின்றதா? ஆகையினால், பல வருடங்களாக தூர்ந்து போயிருந்ததை, இந்த வருடம், இந்த அரசு நிச்சயமாக தூர்வாரும். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. இலட்சுமணன் அவர்கள்.*

**டாக்டர் இரா. இலட்சுமணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியில், 2020–2021–ல் விழுப்புரம் தொகுதிக்குட்பட்ட தளவானூர் அணைக்கட்டு ரூ.25 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு சேதமடைந்ததால், விவசாயிகள் இன்னல்களுக்கு ஆளாகியிருக்கின்றார்கள். அந்த அணை மீண்டும் கட்டப்பட்டு, எப்போது பயன்பாட்டிற்கு வரும் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

[2024 பிப்ரவரி 21

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அதற்கு உரிய நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது; நிச்சயமாகப் பயன்பாட்டிற்கு வரும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார் அவர்கள்.

முற்பகல் 10–25

**திரு. கி. அசோக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதி, கிருஷ்ணகிரி ஒன்றியம், காட்டிநாயனப்பள்ளி பஞ்சாயத்திலுள்ள படேதலாவ் பெரிய ஏரி 163.21 ஏக்கர் நீர்ப் பரப்பைக் கொண்டது. மேலும், 820.55 ஏக்கர் பாசனப் பரப்பை உள்ளடக்கியது. இந்த ஏரியிலிருந்து வரும் உபரி நீர் பாப்பாரப்பட்டி, அகசிப்பள்ளி, மோட்டூர் கால்வாய் வழியாக ஏழரை கிலோ மீட்டர் கடந்து அவதானப்பட்டி ஏரிக்குச் செல்கிறது. மழைக் காலங்களில் உபரி நீர் கிராமப் பகுதிகளில் நுழைந்துவிடுகிறது. எனவே, ஏரியும், கால்வாயும் தூர்வாரப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு அரக்கோணம் சட்டமன்ற உறுப்பினர் திரு. சு. ரவி அவர்களுக்குக் கூறிய பதில் இதற்கும் பொருந்தும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 33, மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் K. அர்ச்சுணன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.